# கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், வள்ளியூர்

முன்னிலை: திரு ஜெ.ஆன்ஸ் ராஜா பி.ஏ, பி.எல்.,
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி, **(FAC)**
வள்ளியூர்

2025 ஆம் வருடம் ஜனவரி மாதம் 03 -ஆம் நாள், வெள்ளிக்கிழமை

திருவள்ளுவர் ஆண்டு 2055 குரோதி வருடம் மார்கழி மாதம் 19-ம் நாள் வெள்ளிக்கிழமை

<u>இ.ம.எண்.07/2024 ன் அ.வ.எண்.74/2014</u>

சா. ஞானதிரவியம் ... மனுதாரர் /2 ம் பிரதிவாதி

/எதிர்/

1) இரா. மகேஸ்வரன்

2) த. சதீஷ்குமார் (இறப்பு)

3) S. டிவிங்கிள்

அவரது பவர் ஏஜெண்ட் அருள்ராஜா மூலம் ... எதிர்மனுதார்கள்/வாதி,
1,3 பிரதிவாதிகள்

இம்மனுவானது 17.12.2024 தேதி அன்று என் முன்னால் இறுதியாக விசாரணைக்கு வந்தபோது மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.S.கல்யாணகுமார் அவர்கள் ஆஜராகியும், 3 வது எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.R.A.ஜோசப் கிங்ஸ்டன் அவர்கள் ஆஜராகியும், 1 வது எதிர்மனுதாரர் ஒருதலைபட்சமாக்கப்பட்டுள்ள நிலையிலும், 2 வது எதிர்மனுதாரர் காலம்சென்றுவிட்ட நிலையிலும், இரு தரப்பில் எடுத்துரைத்த வாத உரையை கேட்டும் சாட்சி மற்றும் சான்றாவணங்களை பரிசீலனை செய்தும் இதுநாள்வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்,

JAYANDRAN ANNSRAJA

Digitally signed by JAYANDRAN ANNSRAJA
Date: 2025.01.03 17:55:57 +0530

**உத்தரவு**

மனுதாரரால் இம்மனுவானது, உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 8 விதி 1A(3)ன்கீழ் இம்மனுவுடன் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணங்களை மனுதாரர் தரப்பு ஆவணங்களாக குறியீடு செய்ய வேண்டி பரிகாரம் கேட்டு இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

1. **மனுவின் சுருக்கம்:**

இம்மனுவின் மனுதாரர் அசல் வழக்கில் 2 வது பிதிவாதி. அசல் வழக்கில் எதிர்வழக்குரை தாக்கல் செய்யும் சமயம் மனுதாரர் கிரையம் பெற்ற கிரையபத்திரம் மற்றும் முன்ஆவணம் தாக்கல் செய்ய இயலவில்லை. மேற்படி ஆவணங்களை தேடிப்பார்த்தும் கிடைக்கவில்லை. எனவே, மேற்படி ஆவணங்களின் நகல் கேட்டு மனு கொடுக்கப்பட்டு, தற்போதுதான் கிடைக்கப்பெற்றது. மேற்படி ஆவணங்கள் மனுதாரரின் வழக்கை நிரூபணம் செய்யக்கூடிய ஆவணங்கள் ஆகும். மேற்படி ஆவணங்கள் முன்னமே தாக்கல் செய்யாதது வேண்டுமென்றோ மனப்பூர்வமாகவோ ஏற்பட்டதல்ல. எனவே, மேற்படி ஆவணங்களை மனுதாரர் தரப்பு ஆவணங்களாக குறியீடு செய்ய வேண்டியது அவசியமாக உள்ளது என மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

2. **3 வது எதிர்மனுதாரர் கள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிருரையின் சுருக்கம்:**

மனுதாரரது மனு சட்டப்படிக்கும், நியாயப்படிக்கும் செல்லத்தக்கதல்ல. மனுவில் கூறப்படும் முதல் 2 ஆவணங்களும் முன்னரே தாக்கல் செய்யாமைக்கு கூறப்படும்

JAYANDRAN ANNSRAJA
Digitally signed by JAYANDRAN ANNSRAJA
Date: 2025.01.03 17:56:08 +0530

காரணங்கள் ஏற்புடையதல்ல. மனுவில் கூறப்படும் 3 வது ஆவணமான 28.09.2009 தீர்மான ஆவணம் 2ம் பிரதிவாதியின் கிரைய ஆவணத்தில் இணைக்கப்படவில்லை. எனவே, 28.09.2009 தேதியில் வெஸ்டாஸ் விண்ட் டெக்னாலஜி இண்டியா பிரைவேட் லிமிட் நிறுவனத்தின் தீர்மானம் பின் யோசனையுடன் உருவாக்கப்பட்ட ஆவணம் என்பதால் கோப்பிற்கு பெறக்கூடியதல்ல. மேலும், 1ம் பிரதிவாதியின் சொத்தை கிரையம் கொடுக்க வெஸ்டாஸ் விண்ட் டெக்னாலஜி இண்டியா பிரைவேட் லிமிட் நிறுவனத்திற்கு எவ்வித உரிமையும் அனுபவமும் இல்லை. எனவே, இம்மனுவானது தள்ளுபடி செய்யப்பட வேண்டும்.

**<u>இம்மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா?</u>**

3. இருதரப்பு வாதமும் கேட்கப்பட்டது. மனுதாரர் தரப்பில், அசல் வழக்கில் எதிர்வழக்குரை தாக்கல் செய்யும்போது மனுதாரர் கிரையம் பெற்ற கிரையபத்திரம் மற்றும் முன்ஆவணம் தாக்கல் செய்ய இயலவில்லை. மேற்படி ஆவணங்களை தேடிப்பார்த்தும் கிடைக்கவில்லை. எனவே, மேற்படி ஆவணங்களின் நகல் கேட்டு மனு கொடுக்கப்பட்டு, தற்போதுதான் கிடைக்கப்பெற்றது. மேற்படி ஆவணங்கள் மனுதாரரின் வழக்கை நிரூபணம் செய்யக்கூடிய ஆவணங்கள் ஆகும். எனவே, ஆவணங்களை மனுதாரர் தரப்பு ஆவணங்களாக குறியீடு செய்ய வேண்டியது அவசியமாக உள்ளது என கூறியுள்ளார்.

அசல் வழக்கானது பாகப்பிரிவினை பரிகாரம் கோரி தாக்கல் செய்துள்ளதால் மனுதாரருக்கு வழக்கை நிரூபிக்க ஒரு வாய்ப்பு அளிக்க வேண்டும் என்பதாலும், இம்மனு அனுமதிக்கப்படுவதால் எதிர்மனுதாரர்கள் எந்தவிதமான பாதிப்புக்கும் உள்ளாகமாட்டார்.

JAYANDRAN ANNSRAJA
Digitally signed by JAYANDRAN ANNSRAJA
Date: 2025.01.03 17:56:17 +0530

மேலும், அசல் வழக்கின் முழுமையான நீதிமுறை தீர்மானிப்பிற்கு மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணங்கள் அவசியமானது என இந்நீதிமன்றம் கருதுகிறது.

இறுதியாக, இம்மனுவானது அனுமதிக்கப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு, நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு 2025 ம் வருடம் ஜனவரி மாதம் 03-ம் நாள் திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

JAYANDRAN ANNSRAJA
Digitally signed by JAYANDRAN ANNSRAJA
Date: 2025.01.03 17:56:23 +0530

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,(பொறுப்பு)
வள்ளியூர்.

<u>மனுதாரர் தரப்பு சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள்</u>: இல்லை

<u>எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள்</u>: இல்லை

JAYANDRAN ANNSRAJA
Digitally signed by JAYANDRAN ANNSRAJA
Date: 2025.01.03 17:56:28 +0530

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,(பொறுப்பு)
வள்ளியூர்.

முு.மா.உ.நீதிமன்றம்,வள்ளியூர்,

வரைவு, சீரான உத்தரவு

இ.ம.எண்.07/2024 இன்

அ.வ.எண்.74/2014

தேதி.03.01.2025